RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் சேரநாட்டுக் குடிகள்

**அ. சம்பத்குமார் [அ] ***

[அ] தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641048, தமிழ்நாடு, இந்தியா

# The People of the Chera Kingdom in Sangam Literature

**M.Sampath Kumar [a, *]**

[a] Department of Tamil, Dr.N.G.P. Arts and Science College (Autonomous), Coimbatore, Tamil Nadu – 641048, India

*Corresponding Author:
sampathkumarm@drngpasc.ac.in

**ABSTRACT**

Ancient Tamilakam was traditionally divided into the three great kingdoms ruled by the Chera, Chola, and Pandya dynasties, known respectively as Chera Nadu, Chola Nadu, and Pandya Nadu. These regions were also identified according to their geographical orientation as Kudapulam, Kunapulam, and Thenpulam. Historical and literary evidence suggests that among the three crowned dynasties, the Cheras were one of the most ancient and distinguished royal lineages, playing a significant role in the political, economic, and cultural development of early Tamil society. Sangam literature refers to the Cheras by several titles, including Vanavar, Villavar, Kudavar, Kuttuvar, Poraiyar, and Malaiyar, each reflecting different aspects of their identity, territory, lineage, or cultural heritage. These references provide valuable insights into the communities associated with the Chera kingdom and their contribution to the social and political life of ancient Tamilakam. This article examines the various communities of the Chera country as represented in Sangam literature, exploring their historical identity, social organization, and cultural significance. By analyzing literary references to these groups, the study highlights the diversity and prominence of the Chera people within the broader context of Sangam civilization.

**Keywords:** Sangam civilization, Tamil society, Chera Kingdom, Chera people, Three great kingdoms.

## முன்னுரை

பண்டைத் தமிழ்நாட்டில் மூவேந்தரும் ஆட்சி புரிந்த நாடுகள் முறையே சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என வழங்கப்பெற்றன. குடபுலம், குணபுலம், தென்புலம் எனவும் அவை அமைந்திருந்த திசைநோக்கி அழைக்கப்பெற்றன. மூவேந்தருள் சேர வேந்தரே தொன்மையானவராகவும், சிறப்புமிக்கவராகவும் விளங்கியுள்ளனர் என்பது பண்டைய வரலாற்றுச் சான்றுகளின் வழி அறிய முடிகிறது. சேரர்களை வானவர், வில்லவர், குடவர், குட்டுவர், பொறையர், மலையர் எனப் பலவாறு குறிப்பர்.

## சேரநாட்டுக் குடிகள்

சேரநாட்டில் குடவர், குட்டுவர், அதியர், உதியர், மலையர், மழவர், மறவர், இளையர், பூழியர், வில்லோர், கொற்றன், கொங்கர், குறவர் முதலான குடிகள் வாழ்ந்து வந்ததைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

## குடவர் - குட்டுவர்

'குடவர்' என்னும் சொல் மேற்கு நாட்டில் வாழ்பவர் என்ற பொருளுடையது. குடவர், குட்டுவர் என்ற பெயர்கள் முறையே மேற்கு நாடுகளிலும், மலை நாடுகள் அல்லது பள்ளத்தாக்குகளிலும் வாழும் மக்களைக் குறிப்பனவாகும். குடவர் என்ற சொல் சங்க இலக்கியத்தில்,

'வடவர் வாட குடவர் கூம்ப' பட்டினப்பாலை,பா.அ.எ.276

'குடவர் கோவே கொடித்தே ரண்ணல்' பதிற்றுப்பத்து, பா.அ.எ.55:9

என்னும் இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

'குடவன்' என்னும் சொல் குட்டுவன் இரும்பொறை, குட்டுவன் கண்ணன், குட்டுவன், செங்குட்டுவன் முதலியோரைக் குறிப்பதாக அமைகிறது.

சேர இனத்தின் உட்பிரிவுகள் பலவற்றிலும் அவ்வினத்தில் சிறந்த பேரரசர் பலரை ஈன்ற பெருமையுடையது குட்டுவர் குடியே ஆகும். பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அந்துவஞ்சேரல், கோட்டிய சேரன் செங்குட்டுவன், நம்பி குட்டுவன் போன்ற அரசர்கள் அக்குடியில் பிறந்தவரே என்று குட்டுவன் குடியைச் சுட்டுகிறார் சா.கோவிந்தன்.

குட்டுவர் குடியினர் அறம், ஆண்மை, உருவம், திரு, கல்வி, கேள்வி இவற்றில் சிறந்து விளங்கியுள்ளனர். குட்டுவன் கண்ணன், குட்டுவன் கீரனார் என்பது புலவர்களின் பெயர்களாகவும் அமைந்துள்ளது.

"குட்டுவன் தொண்டியன்ன" ஐங்குறுநூறு, பா.அ.எ.178:3

"கடும்பகட்டி யானை நெடுந்தேர்க் குட்டுவன்" நற்றிணை, பா.அ.எ.395:4

## அதியர் - உதியர்

சேரர் குடியோடு உறவு கொண்டாடும் வேறு குடிகளைப் பற்றி சங்க இலக்கியப் பாடல்கள் சுட்டியுள்ளன. அதியர் என்னும் அதியமான் தலைமுறை வந்தவரைக் குறிக்கும். 'தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஒரு சிறு நிலப்பகுதியை அதியர் என்ற இனத்தவர் ஆண்டு வந்தனர். அதியர் இனம் யாதோ ஒரு வகையில் சேர இனத்தோடு தொடர்புடையதாகும். தலைசிறந்த வீரனும் வள்ளலுமாய் விளங்கிய அதியமான் நெடுமான் அஞ்சியையும், அவன் மகள் பொகுட்டெழினியையும் பெற்றளித்த பெருமையுடையது அவ்வதியர் குடி' என்று கா.கோவிந்தன் என்னும் அறிஞர், தமிழர் தளபதிகள் (ப.36) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு அதியமான் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இதை,

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்

பசும்பூண் பாண்டியன் வினைவல் அதியன்

களிற்றொரு பட்ட ஞான்றை

ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பி;னும் பெரிதே" குறுந்தொகை, பா.எ.393

என்ற குறுந்தொகைப் பாடல் வழி அறிய முடிகிறது.

## உதியர்

உதியன் என்ற பெயரோடு சங்க இலக்கியத்தால் அறியப் பெறுபவர்கள் இரண்டு மன்னர்கள். அவர்களுள் ஒருவன் போர்க்களத்தில் ஐவர்க்கும் நூற்றுவர்க்கும் சோறளித்தவனாகிய உதியஞ்சேரலாதன். மற்றொருவன் பெருஞ்சிறப்பு வாய்ந்த நன்னன் உதியன் ஆவான். இவ்விரு வேந்தர்களும் தமிழகத்தில் பல புகழைப் பெற்றிருந்தனர் எனச் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.

'உதியன் என்ற சொல் குறிப்பிட்ட ஒரு இனக்குடியைச் சுட்டுகிறது என்பதைக் காட்டிலும், சேரர் குடிக்கே உரியது என்று கொள்வதே பொருத்தமாகும்' என்று துரை அரங்கசாமி என்னும் தமிழறிஞர் சங்ககாலச் சிறப்புப்பெயர்கள் என்னும் நூலில் (ப.244) குறிப்பிடுகிறார்.

## மலையர்

சேரநாட்டுக் குடிகளுள் மலையர் குடியும் ஒன்றாகத் திகழ்ந்தது. மலையன் என்பது மலைகளின் தலைவன். சேர நாட்டின் தலைவன் என்று பொருள்படும். மலையமான் நாடு "மலாடு" என்று மருவியும் வழங்கப்பட்டது. சேரர் குடியின் கிளைக்குடியைச் சேர்ந்தவர்களுள் சிலர் மேற்குப் பகுதியில் தங்கள் நாட்டை விரிவாக்க இயலாமையால் கிழக்கில் திரும்பி வடஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களாக இப்போதுள்ள பகுதிகளை வென்று, அங்குக் குடியேறினார்கள். பெண்ணையாற்றங்கரையில் உள்ள திருக்கோவிலூரை ஆண்டவன் மலையமான் என்று குறிப்பிடப்படுகிறான். இந்தப் பகுதி மலைகள் நிறைந்த பகுதி ஆதலால் மலைநாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மலையர் குடியில் தோன்றியவராக மெய்ப்பொருள் நாயனாரைக் குறிப்பர்.

மலையன் என்பவன் புலவர், பாணர் முதலிய இரவலர்க்குக் களிறும், தேரும் பலநல்கி பெரும்புகழோடு விளங்கினான். இவனைக் கார் என்றும், மலையமான் என்றும், கோமான் என்றும் கூறுவர். இதனை,

'துஞ்சா முழவிற் கோவற் கோமான்

நெடுந்தேர்க் காரி.....................' அகநானூறு, பா.எ.35

'முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்' குறுந்தொகை,பா.எ.312

என்னும் பாடலடிகள் கூறுகின்றன.

## மழவர் - மழையர்

மழவர் குடியைச் சேர்ந்தவர்கள் சேரர்க்கும் அதியர்க்கும் பிற மன்னர்க்கும் மெய்க்காப்பாளராக விளங்கினர். சேர மன்னன் "மழவர் மெய்ம்மறை" என்று அழைக்கப்படுகின்றான். மழவர் எல்லோரும் வீரத்தில் சிறந்தவர்களாக இருந்தனர். இதனால் மழவர் என்ற சொல் வீரர் என்னும் பொருளைக் குறிப்பதாயிற்று. இது,

'மிதி அல் செருப்பின் பூழியர் கோவே

குவியல் கண்ணி மழவர் மெய்ம்மறை' பதிற்றுப்பத்து, பா.எ.21

என்ற பதிற்றுப்பத்து பாடலின் மூலம் அறிய முடிகிறது. மேலும் மழவர் என்ற சொல்லுக்கு இளமை என்ற பொருளும் உண்டு என்பதை,

"மழவும் குழவும் இளமைப் பொருள்"- தொல், சொல், நூ.311

என்னும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகிறது.

## பூழியர்

"பூழியர்" என்னும் சொல் சேரர்களைக் குறிக்கும் சொல்லாகத் திகழ்கிறது. பூழியர்கள் வாழ்ந்த இடம் பூழிநாடு எனப்பட்டது. பூழியர் குறித்துச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. "பூழியர்" என்னும் சொல் உவமையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "பூழியர்களுடைய சிறிய வெண்மை நிறம் உள்ள தலைகளையுடைய ஆடுகளின் மந்தை பரவி நிற்பதுபோல் மீன்களை உண்ணும் குருகுகள் நிறைந்து நிற்கின்ற தாழைப் புதர்கள் அடர்ந்த பெருந்துறை காணப்பட்டதை,

"யாரணங் குற்றனை கடலே பூழியர்

சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன

மீனார் குருகின் காலையம் பெருந்துறை” குறுந்தொகை,பா.எ.163

என்னும் பாடலடிகள் உரைக்கின்றன.

## வில்லோர்

வில்லோர் என்ற சொல் பொதுவாக வில்லேந்திய வீரர்களைக் குறிக்குமாயினும், தங்கள் கொடியில் வில்லுருவம் பொறித்துக் கொண்ட சேரரையே அது குறிக்கிறது. வில்லோர் என்பது சேரர் குடியின் இணைக்குடியாக விளங்கியது. சேரர்கள் தங்கள் பெயருக்கேற்ப தலைமுறை தலைமுறையாகச் சிறந்த வில் வீரர்களாகத் திகழ்ந்ததால் இவரை “வில்லோர் பெரும” என பிட்டங்கொற்றன் விளக்கப்படுகிறான்.

பிட்டங்கொற்றன் அரணமைந்த குதிரை மலைக்குத் தலைவனாகத் திகழ்ந்துள்ளான். இம்மலையில் வாழ்ந்த குறவர்கள் விருந்தினரை எதிர்கொண்டழைத்துச் சென்று மரை ஆனிலிருந்து கறந்த நுரைகொள் பாலில் இட்டுச் சமைத்த தினைச்சோறும், மான் இறைச்சியும் அகன்ற வாழையிலையில இட்டு உபசரிப்பர் என்பதால் அவர்களின் அரசன் ஈகைப் பண்பு நிறைந்தவன் என்பதை,

‘மரையான் கறந்த நுரை கொள்தீம்பால்

......

நறைநார்த் தொடுத்த வேங்கையங்கண்ணி

வடிநவி லம்பின் வில்லோர் பெரும’ புறநானூறு, பா.எ.168

என்னும் பாடலடிகளால் உணர முடிகிறது.

## கொங்கர்

கொங்கு நாட்டைக் கொங்கர் என்னும் இனத்தினர் ஆட்சி செய்தனர். கொங்கர் என்னும் குடிக்கு இளஞ்சேரல் இரும்பொறை என்பவன் தலைவனாக விளங்கினான். கொங்கன் என்பது சேரனின் பட்டப் பெயராகத் திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. கொங்கர் நாட்டை வேலேந்திய படையுடன் சேர மன்னன் குட்டுவன் கைப்பற்றினான் என்பதை,

“பொன் செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்

சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்

கயிறுகுறு முகவை ஆயின மொய்க்கும்

ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த” பதிற்றுப்பத்து, பா.அ.எ.22:12-15

என்னும் பாடலடிகளால் அறிய முடிகிறது.

## குறவர்

குறவர் என்னும் பெயர் பொதுவாக மலைப் பகுதிகளில் வாழும் மக்களைக் குறிக்கும் சொல்லாகும். குறவர் குடியின் தலைவனாகச் சங்க இலக்கியத்தில் “ஏரைக்கோன்” எனக் குறிக்கப்பட்டுள்ளான். புறநானூற்றில் ஏரைக்கோனைப் புகழ்ந்து குறமகள் இளவெயினி என்னும் புலவர் பாடியுள்ளார். “தன்னைவிடச் சிறந்தவர்கள் தனக்குத் தவறிழைத்தால் அதைப் பொறுத்தலும், மற்றவர்கள் வறுமையால் வாடுவது கண்டு தான் நாணுவதும், படையிடத்துப் பிறர் பழிக்கப்படாத வலியுடையதனாலும், அரசுடைத்தாகிய அவைக்களத்தில் மற்றவரை விட மேம்பட்டு நடத்தலும் ஆகிய

உயர்ந்த பண்புகள் காந்தள் பூமாலையும் கொல்லும் வேலினையும், அகன்ற மார்பினையும் மேகக் கூட்டங்களைத் தடுத்து நிறுத்துகின்ற வளமிக்க மலையையும் உடைய குறவர் தலைவனாகிய ஏரைக்கோனுக்கே பொருந்துவனவாகும் என்று புகழப்படுவதை,

'தமர் தற் றப்பின்அது நோன்றல்லும்

பிறர்கை யறவு தான்நா ணுதலும்' புறநானூறு பா.எ.157

என்னும் புறநானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது.

## முடிவுரை

இவ்வாறாகச் சேர நாட்டில் குடவர், குட்டுவர், அதியர், உதியர், மலையர், மழவர், மறவர், இளையர், பூழியர், வில்லோர், கொற்றன், கொங்கர், குறவர் முதலான பல்வேறு குடிகள் இருந்ததைச் சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன. அவர்கள் சிற்றரசர்களாகவும் இனக்குழுக்களாகவும் வீரம் மிக்கவர்களாகவும் திகழ்ந்ததைச் சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

## References


கோவிந்தன், கா, (1989) தமிழர் தளபதிகள், கழக வெளியீடு, சென்னை

துரைஅரங்கசாமி, மொ.அ. (1960) சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், பாரி நிலையம், சென்னை

நற்றிணை, (2005) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

குறுந்தொகை, (2005) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

ஐங்குறுநூறு, (2005) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

பதிற்றுப்பத்து, (1992) உ.வே.சா பதிப்பகம், சென்னை.

அகநானூறு, (2005) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, திருத்திய பதிப்பு 2005

புறநானூறு மூலமும் உரையும், (2005) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, திருத்திய பதிப்பு 2005

இராகவையங்கார் ரா., (1951) பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிதம்பரனார், ஆ (1972) சேரர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License